# பட்ஜெட்டில் ஹஜ் மானியம் - முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றும் கண்துடைப்பு நாடகம்

தமிழ்நாடு அரசின் 2026-27 இடைக்கால பட்ஜெட்டில் ஹஜ் மானியத்தை ரூ.25,000-லிருந்து ரூ.35,000-ஆக உயர்த்தியிருப்பதாக அறிவித்து, இதை "முஸ்லிம்களுக்கான மாபெரும் சலுகை" என விஜய் அரசு கட்டமைத்து வருகிறது

உண்மை நிலை என்ன?

1. **செலவு vs மானியம்:** ஒரு முஸ்லிம் அரசு கோட்டா மூலம் ஹஜ் செல்ல ஆகும் செலவு சுமார் ரூ.4,00,000. தனியார் மூலம் ரூ.8,00,000 முதல் ரூ.9,00,000 வரை. இந்த நிலையில் ரூ.35,000 மானியம் என்பது மொத்த செலவில் 8% கூட இல்லை. இது தெளிவான கண்துடைப்பு.
2. **யாருக்கு பயன்?:** இந்த மானியம் தமிழ்நாடு அரசு ஹஜ் கமிட்டி மூலம் செல்லும் சில நூறு பேருக்கு மட்டுமே. தனியார் ஹஜ் நிறுவனங்கள் மூலம் செல்லும் 60%க்கும் மேற்பட்டோருக்கு இந்த மானியம் கிடைக்காது.
3. **இது மானியமே இல்லை:** மத்திய அரசு 2018-லேயே ஹஜ் மானியத்தை முழுமையாக ரத்து செய்துவிட்டது. இப்போது வழங்கப்படுவது விமான கட்டணத்தை உயர்திவிட்டு, அதிலிருந்து ஒரு சிறு தொகையை திருப்பி தருவதே ஆகும்.
4. **சமூகத்தின் கோரிக்கை இல்லை:** ஹஜ் என்பது "இஸ்திதாஅத்" - பொருளாதார தகுதி உள்ளவர்களுக்கான இஸ்லாமிய கடமை. "எங்களுக்கு மானியம் தாருங்கள்" என்று முஸ்லிம் சமூகம் ஒருபோதும் கேட்டதில்லை. இந்த மானியத்தை நம்பி யாரும் ஹஜ் பயணம் மேற்கொள்வதில்லை.

எங்களது கேள்வி:

முழு பட்ஜெட்டிலும் முஸ்லிம் சமூகத்திற்கு ஹஜ் மானியம் தவிர வேறு என்ன சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது?

வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, வக்ஃப் சொத்து பாதுகாப்பு, சிறுபான்மை நலத்துறை நிதி - இவை எதிலும் குறிப்பிடத்தக்க அறிவிப்பு இல்லை.

ஆனால் ரூ.10,000 மட்டும் உயர்த்தி கொடுத்துவிட்டு "முஸ்லிம்களுக்கு மட்டும் சலுகை" என பாசிச சக்திகள் கதறவும், "நாங்கள் பெரிய சலுகை தந்தோம்" என அரசு விளம்பரம் செய்யவும் மட்டும் இந்த அறிவிப்பு பயன்படுகிறது.

எனவே நடிகர் விஜய் அரசு இந்த கண்துடைப்பு மானிய நாடகத்தை கைவிட்டுவிட்டு, முஸ்லிம் சமூகத்தின் உண்மையான பிரச்சினைகளான கல்வி, வேலைவாய்ப்பு, வக்ஃப் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.



**சைதை சாதிக்**
(கழக செய்தி தொடர்பாளர்)



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், இளைஞர் அணியின் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த அரசைக் கண்டித்து, கீ.வ.குப்பம் ஒன்றியங்கள் இணைந்து கே.வி.குப்பம் பேருந்து நிலையம், பேரறிஞர் அண்ணா சிலை முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஒன்றியச் செயலாளர்கள் கே.சீதாராமன், லோ.இரவிச்சந்திரன், மாநில கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் சி.கோபி, பொதுக்குழு உறுப்பினர் கே.தயாளமூர்த்தி மற்றும் இரா.தாமோதரன், எம்.அசோக்குமார், ஒன்றிய கழகங்களின் அனைத்து நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

### பால் உற்பத்தி உள்பட

# பால்வள மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் யாவை?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 7 -

பால் உற்பத்தி உள்ளிட்ட பால்வள மேம்பாட்டிற்கு ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.



இதுகுறித்த அவரது கேள்விகள் வருமாறு:-

ராஷ்டிரிய கோகுல் மிஷனின் கீழ் தமிழ்நாட்டில் நாட்டுப்புற கால்நடை பாதுகாப்பு, மரபணு மேம்பாடு, அதிக பால் உற்பத்தி மற்றும் நிலையான பால்வள மேம்பாட்டை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளதா, அவ்வாறு எனில், ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை என்ன?

தமிழ்நாட்டிற்கு இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் மற்றும் வழங்கப்பட்ட உதவிகளின் கூறுகள் வாரியான (componentwise) விவரங்கள்;

தமிழ்நாட்டில் நாட்டுப்புற இன மேம்பாடு, செயற்கை முறை கருவூட்டல், கரு மாற்று தொழில்நுட்பம் (embryo transfer technology), விந்து சேகரிப்பு நிலையங்கள் (semen stations), கோகுல் கிராமங்கள், இன் விட்ரோ கருத்தரித்தல் (IVF) வசதிகள் மற்றும் பிற கால்நடை இனப்பெருக்க உள் கட்டமைப்புகளுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளதா, அவ்வாறு எனில், அதுகுறித்த விவரங்கள்;

தமிழ்நாட்டில் கோகுல் கிராமங்கள், விந்து சேகரிப்பு நிலையங்கள், IVF ஆய்வகங்கள் மற்றும் இனப் பெருக்கப் பண்ணைகள் உள்ளிட்ட கால்நடை இனப்பெருக்க உள்கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா, அவ்வாறு எனில், அதுகுறித்த விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

இதற்கு மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங் விரிவாக பதிலளித்துள்ளார்.

அது வருமாறு:-

நாட்டுப்புற இனங்களின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு, கால்நடை எண்ணிக்கையின் மரபணு மேம்பாடு மற்றும் பால் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக ராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு ரூ. 12,521.83 லட்சம் மத்திய உதவி விடுவிக்கப்பட்டு, அது மாநில அரசால் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத்தில் RGM திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியுதவியின் கூறுகள் வாரியான விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில், மாநிலத்தில் பால்வள உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) கீழ் தமிழ்நாட்டில் ரூ. 9,525.07 லட்சம் விடுவிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

### வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவேந்தல் நிகழ்ச்சி!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கை!

வேலூர், ஆக. 7 -

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவேந்தல் நிகழ்ச்சி மாவட்டம் முழுவதும் இன்று நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்டக் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்து மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி.வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 01.08.2026 அன்று நடைபெற்ற மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இன்று (7.8.2026-வெள்ளிக்கிழமை), முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை மாவட்டம் முழுவதும் உணர்வுப்பூர்வமாகக் கடைப்பிடிக்க வேண்டுகிறோம்.

**காலத்தால் அழியாத காவியத் தலைவர்!**

**தமிழினத்தின் தன்மானத்தைக் காத்த போராளி!**

**ஏழை, எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றிய சமூகநீதிச் சூரியன்!**

**நம் உயிரிலும் உணர்விலும் என்றும் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர்!**

அவர் நம்மை உடலால் பிரிந்திருக்கலாம்; ஆனால், அவர் விதைத்த சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம் மற்றும் தமிழின உரிமை என்னும் இலட்சியங்கள் ஒவ்வொரு கழகத் தொண்டரின் இதயத்திலும் அணையாத நெருப்பாக எரிந்து கொண்டிருக்கின்றன.

எனவே, மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டம் மற்றும் கிளைக் கழகங்களும், தங்களது பகுதிகளில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி, அவரது தியாகங்களையும் சாதனைகளையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சியை எழுச்சியுடனும் உணர்வுப்பூர்வமாகவும் நடத்திட வேண்டும்.

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டம் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

**நம் தலைவரின் நினைவைப் போற்றுவது ஒரு நாள் நிகழ்ச்சி மட்டுமல்ல;**

**அவர் காட்டிய வழியில் தொடர்ந்து பயணிப்போம் என்று எடுத்துக்கொள்ளும் இலட்சிய உறுதிமொழியாகும்!**

**"கலைஞர் வாழ்ந்தார் தமிழுக்காக!**

**நாம் வாழ்வோம் கலைஞரின் இலட்சியங்களுக்காக!"**

அனைவரும் தவறாது கலந்துகொண்டு,

நினைவேந்தல்

நிகழ்ச்சியைச் சிறப்பிக்குமாறு அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அனைத்துக் கிளைகளிலும் அஞ்சலி செலுத்துவீர்!

## வடக்கு மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் அறிக்கை!



கள்ளக்குறிச்சி, ஆக. 7 -

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சங்கராபுரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் அறிக்கை வருமாறு :-

நவீன தமிழகத்தை கட்டமைத்த சிற்பி - இனம், மொழி காக்க தனது இறுதி மூச்சு வரை உழைத்திட்ட உலகத் தமிழர்களின் தலைசால் தலைவர், தமிழர் தம் நெஞ்சங்களில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி,

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (7.8.2026 வெள்ளிக்கிழமை) காலை 8 மணி அளவில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழகங்கள் மற்றும் வார்டு கழகங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்தும், கழகக் கொடியேற்றியும், புகழஞ்சலி செலுத்தி, ஏழை - எளிய மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சிகளை அந்தந்த பகுதியிலுள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர், பேரூர்ச் செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை மற்றும் வார்டு கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்,

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எலமந்தா
### ஆகஸ்ட் 7 (1995)



**தி.மு.கழக ஆதிதிராவிட நலப் பிரிவு மாநில செயலாளராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**


**எப்பொழுதும் ஓடியாடி ஏதாவது கழகப் பணி, பொதுப்பணி மற்றும் ஆதிஆந்திர மக்களுக்கான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நிகரற்று விளங்கியவர்.**

**"தொண்டனாக அலைந்தவர். தொழில் மேற்கொண்டு சிறந்தவர். என் விருப்பம் நிறைவேற்றிட எம்.எல்.சியாகப் பொறுப்பேற்று மேலவையில் கருத்து முழக்கம் செய்தவர். கழகத்தை உயிராக எண்ணியவர்!" என தலைவர் கலைஞர் அவர்களால் 'வீரவேங்கையொன்று வீழ்ந்ததே!' என இரங்கல் கடிதத்தில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஹைவேவிஸ் எம். மனோகரன்
### ஆகஸ்ட் 7 (2017)



**இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**பத்து ஆண்டுகளுக்கு மேலாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த மலைப் பிரதேசமான ஹைவேவிஸ் பேரூர்க் கழகச் செயலாளராகவும் – இருபத்தெட்டு ஆண்டுகள் ஒன்றுபட்ட மதுரை மாவட்ட தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**